செ.வெ.எண்.39/அக்டோபர் நாள் :18.10.2019

**தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், கடத்தூர் உள்வட்டம், மணியம்பாடி கிராமத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எச்.ரஹமத்துல்லா கான் அவர்கள் தலைமையில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் 24.10.2019 அன்று நடைபெற உள்ளது.**

---

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், கடத்தூர் உள்வட்டம், மணியம்பாடி கிராமத்தில் வருகின்ற 24.10.2019 வியாழக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எச்.ரஹமத்துல்லா கான் அவர்கள் தலைமையில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் நடைபெற உள்ளது.

இம்முகாமில் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டு தங்களது துறைகளின் திட்டங்கள் குறித்து எடுத்துரைக்க உள்ளார்கள்.

எனவே தருமபுரி பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், கடத்தூர் உள்வட்டம், மணியம்பாடி கிராமம் மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் தங்கள் கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை வழங்கி பயன்பெறுமாறு மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எச்.ரஹமத்துல்லா கான் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**